




அமரர்

# உயர்திரு. கந்தசாமி குமாரசாமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்து
வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

23.08.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும்
மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் உயர்திரு

# கந்தசாமி குமாரசாமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**23.08.2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



"துறந்தார் பெருமை துணைக்கூறின்
வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"

**அமரர் உயர்திரு கந்தசாமி குமாரசாமி அவர்களின்
திருப்பாத கமலங்களிற்கு இம்மலர் சமர்ப்பணமாக !**

ஜனனத்தின் பின்னெமக்குத் தந்தையென முகம் காட்டி
தினந்தோறும் பாசத்தைப் பருக்கியே எமை வளர்த்து
கனகல்வி கலைகளெல்லாம் காலத்தால் எமக்களித்து
மனத்தின்கண் மாசிலாத தெய்வமென
வாழ்கின்ற இனத்துயர்ந்த
தந்தையார் குமாரசாமி மறைந்ததனால்
தனம்பொருள் விடுத்தவரின்
தகவாழ்வின் நினைவெடுத்து
சினந்தணித்தே சிறுமலராய்
ஆக்கியதைக் கரமெடுத்து
வனத்துறையும் தலைவனார்தாழ்
சாற்றுகின்றோம் சமர்ப்பணமே!

*குடும்பத்தின் தலைவிளக்காய்
குடும்பத்தவர்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வழிபடு தெய்வத்துதி

கங்கையணி செஞ்சடைக்கடவுள்
கொட்டடிப்பேரன் நீலகண்டன்
பொங்குமருட் கருணை பொழியும்
பார்வதியாளுடனுறை இறைவன் கோயில்
திங்கள் வெள்ளி விளக்கேற்றி
திறமுறவே பூசித்துப் பேணி வாழ்ந்த
மங்காப்புகழுடை குமாரசாமி ஆத்மா
மகாதேவர் மலரடியில் சேர்வதாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்னை மடியில்

11 - 09 - 1931



ஆண்டவன் அடியில்

24 - 07 - 2019

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும்
மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# உயர்திரு. கந்தசாமி குமாரசாமி

அவர்களின்

## திதி வெண்பா

தாரணியில் திலகம் குமாரசாமி என்போன்
தாரணிவோன் றன்கழலைச் சேர்ந்த நாள் - பாரறியும்
ஆண்டு விகாரி ஆடி தேய் பிறையிற்
பூண்ட சப்தமி யெனப் போற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே.

## தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையில் பலி கொண்டுழல்வாய்
உடலுள் உறுசூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே!

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈர்ந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

மண்ணுலகத் தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கமண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பமண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் உயர்திரு. கந்தசாமி குமாரசாமி அவர்களின்
### (முன்னாள் மருந்து விற்பனைப் பிரதிநிதி)
## வாழ்வியல் பதிவுகள் சில..

கலைவளமும், கடல்வளமும், கமபுல வளங்களும், தெய்வீகத் திருத்தல வளங்களுமென மலிந்திருக்கின்ற சோழியபுரம் என்று சரித்திரப் புகழோடு அழைக்கப்படுகின்ற சுழிபுரம் கிராமத்திலே அக்காலத்தில் மிகவும் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தவர்கள் அமரர்களான கந்தசாமி பாறுவதி தம்பதியர்களா வார்கள். கந்தசாமி பாறுவதி தம்பதியர்கள் இல்லறத்தை நல்லற மாக்கி இனிய வளங்கள் பலதோடும் இன்புற்று வாழ்கின்ற காலத்திலே இவர்களுக்கு எல்லாச் செல்வங்களோடும் பிள்ளைச் செல்வமாக அமரர் குமரசாமி அவர்கள் கந்தசாமி பாறுபதி தம்பதிகளுக்கு 11.09.1931ஆம் ஆண்டு இப்பூவுலகில் ஜனன மானார். இவருக்கு மயில்வானம், பரமேஸ்வரி, நமசிவாயம், நாராயணமூர்த்தி ஆகிய நான்கு சகோதரர்கள் உள்ளனர்.

கந்தசாமி பாறுவதி தம்பதியர்கள் மகன் குமாரசாமி அவர்களை அன்போடும், அக்கறையோடும் ஏனைய சகோதரர்களோடு சேர்த்தெடுத்து மிகவும் பக்குவமாக வளர்த்தார்கள். அமரர் குமாரசாமி அவர்களும் தாய் தந்தையர்க்கு இனிய மகனாகவும் சகோதரர்கட்கு பாசமிக்க சகோதரனாகவும் வளர்ந்து பாலப்பருவத்தைக் கடந்து பள்ளிப் பருவத்தை அடைந்தார். குமாரசாமி அவர்களுக்கு வளமான அடிப்படைக் கல்வியை ஊட்ட விரும்பிய அவரின் பெற்றோர்கள் அவரை அக்காலத்திலே ஊரிலே அடிப்படைக் கல்விக்குப் பெயர்பெற்று விளங்கிய யா/ஐக்கிய சங்கம் சைவவித்தியாசாலையிலே சேர்த்து வளமான அடிப்படைக்கல்வியை பெற்றுக்கொடுத்தார்கள். அடிப்படைக்கல்வியான ஆரம்பக்கல்வியை சிறந்த முறையிலே பெற்றுக்கொண்ட குமாரசாமி அவர்களுக்கு சிறப்பான இடைநிலைக் கல்வியையும் பெற்றுக் கொடுத்துவிட வேண்டுமென்று விரும்பிய பெற்றோர்கள் அவரை அக்காலம் தொட்டு இடைநிலைக் கல்விக்கும், ஆங்கிலக் கல்விக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்பெற்று விளங்கிய யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலே சேர்த்து மிக மிகச் சிறப்பான இடைநிலைக் கல்வியை ஊட்டினார்கள்.

அமரர் குமாரசாமி அவர்களும் சிறப்பான இடைநிலைக் கல்வியைப் பெற்றுக்கொண்டதோடு சமயத்துறையிலேயும், விளையாட்டுத்துறையிலேயும், கலைகலாச்சாரத் துறையிலேயும் சிறந்து விளங்கியதோடு தன்னைக் கற்கவைத்த பெற்றோர் களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் கற்ற பாடசாலைக்கும் பெருமை சேர்த்துக் கொடுக்கும் முதல் மாணவனாக மலர்ந்து வந்தார். ஒழுக்கம், பண்பாடு, தன்னடக்கம், கீழ்ப்படிவு என்பவற்றிற்கு உதாரணம் காட்டுகின்ற வகையிலே அவர் தன்னை ஆக்கிக்கொண்டமை எல்லோர்க்கும் ஓர் வரப்பிரசாதம் என்றே குறிப்பிடலாம். இவ்வாறு மாணவப் பருவத்திலே சிறந்து விளங்கிய அமரர் குமாரசாமி அவர்கள் ஊக்கமான மேல்நிலைக் கல்வியையும் பெற்றுவிட வேண்டுமென்று எல்லோரும் விரும்பியிருந்த போதும் அமரர் குமாரசாமி அவர்கள் தன்னுடைய குடும்ப நிலமையினைக் கருத்திற்கொண்டு தானும் மற்றவர்களோடு சேர்ந்து குடும்ப பாரத்தில் சிறிதைச் சுமக்க வேண்டும் என்ற பேரவாவினால் உந்தப்பெற்று வேலைதேடும் படலத்தை ஆரம்பித்தார்.

நீதி, நேர்மை, கடமை உணர்வு, சுறுசுறுப்பு போன்றவற்றோடு கூடிய அமரர் குமாரசாமி அவர்கள் நல்ல ஆங்கில அறிவும் பெற்றிருந்தமையால் கொழும்பிற்குச் சென்று தன்னை ஒரு மருந்து விற்பனைப் பிரதிநிதியாக அடையாளப்படுத்திக்கொண்டு அக்கடமையினையே தொழிலாகச் செய்துவந்தார். அதனால் நல்ல ஊதியம் பெற்றுக்கொண்டதோடு மட்டும் நின்றுவிடாமல் ஒருவித சமுதாய அந்தஸ்த்தினையும் கௌரவத்தையும் பெற்றுக் கொண்டார். அவர் ஒரு மருந்து விற்பனையாளராக இருந்தமையால் அதற்கேற்ற ஆடையணிந்து மருத்துவத் துறையினர் அனைவரும் விரும்பத்தக்க வகையிலே தன்தொழிலினை மிகவும் சிறப்பாகச் செய்து வந்தார். அமரர் குமாரசாமி அவர்களின் கடின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பினால் அவரது குடும்பம் சிறப்புற்றது. இக்காலத்திலே அமரர் குமாரசாமி அவர்களும் திருமணப் பருவத்தை எட்டியிருந்தார். திருமணப் பருவத்தை எட்டியிருந்த அமரர் குமாரசாமி அவர்களுக்கு திருமணம் செய்துவைத்துவிட வேண்டும் என்று விரும்பிய அவரின் உறவுகள் அவருக்கு பெண்பார்க்கும் படலத்தை ஆரம்பித்தார்கள்.

பெண் பார்க்கும் படலத்தை ஆரம்பித்த உறவினர்கள் அமரர் குமாரசாமி அவர்களுக்கு ஏற்ற துணைவியாக அக்காலத்திலே மூளாயிலே சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வந்த கணபதிப்பிள்ளை சுந்தரம்மா தம்பதியர்களின் அன்பு மகளான புஸ்பதேவியை நிச்சயம் செய்து 11.05.1960ஆம் ஆண்டு நல்லதொரு நாளிலே குமாரசாமி புஸ்பதேவி திருமணம் வெகு சிறப்பாக நிறைவேறியது. குமாரசாமி புஸ்பதேவி தம்பதியர்கள் இல்லறத்தை நல்லறமாக்கி எல்லாவிதத்திலேயும் மிக மிகப் பொருத்தமுடையவர்களாக வாழ்ந்து வருகின்ற காலத்திலே இல்லறத்தின் இனிய பயன்களாக இவர்களுக்குச் செல்வத்துட் செல்வமான பிள்ளைச் செல்வங்களாக இருவர் பிறந்தார்கள். அவர்கள் முறையே சிவசுப்பிரமணியம் 02.11.1962ஆம் ஆண்டிலும் சிவாஜினி 02.10.1972ஆம் ஆண்டிலும் பிறந்து ஆசைக்கு ஒன்றும் ஆஸ்திக்கு ஒன்றும் என்ற தத்துவம் துலங்கும்படியாக வாழ்ந்தார்கள்.

அமரர் குமாரசாமி அவர்கள் எதையும் திட்டமிட்டுச் சிறந்த முறையிலே செய்து முடிப்பவராதலால் தனது மகனான சிவசுப்பிரமணியம் அவர்களையும் மகளான சிவாஜினி அவர்களையும் சிறந்த முறையிலே பாதுகாத்துக் கற்பித்து தன்னையே அவர்களுக்காக அர்ப்பணம் செய்து வாழ்ந்ததோடு மட்டுமல்லாமல் மகன் சிவசுப்பிரமணியம் அவர்களையும் தன்னைப்போலவே பண்பாடு, ஒழுக்கம், திறமை, தன்னடக்கம், கீழ்ப்படிவு போன்றவற்றிலே மேலோங்க வைத்து அவர் பிறநாடு செல்ல விரும்பியதால் அவரைக் கனடா நாட்டிற்கு அனுப்பி வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் மண்வாசத்தை மறந்துவிடாமல் அவருக்கு மூளாயைச் சேர்ந்த சரவணமுத்து யோகாம்பிகை தம்பதியர்களின் அன்புப் புதல்வியான பவானி அவர்களைத் திருமணம் செய்துவைத்து அவர்களுக்கு அவர்களின் இனிய இல்லறத்தால் விழைந்த முத்துக்களான ஆரதி, ஆரணி ஆகிய இரு பேரப்பிள்ளைகளையும் மூத்த பேரப்பிள்ளை யான ஆரதி மணமுடித்த சிவசங்கர் அவர்களையும் தனது குடும்ப வாரிசுகளாக ஏற்றுக் கொண்டு அவர்கள் கனடா நாட்டிலே சிறப்போடு வாழ்வதுகண்டு மகிழ்ச்சியுற்றிருந்தார்.

அதேபோலவே அமரர் குமாரசாமி அவர்கள் தான் பாசத்தைக் கொட்டி வளர்த்த தனது மகளான சிவாஜினி அவர்களை சிறந்த கல்வியறிவூட்டி கல்விகேள்விகளிலே வல்லவராக்கி அவரின் விருப்பப்படியே அவரைச் சங்கீதத் துறையிலே மேலோங்க வைத்து ஒரு இசை ஆசிரியையாக்கியதோடு மட்டுமல்லாமல் அவருக்கு ஒரு சிறந்த இல்லறத்தை அமைத்துக் கொடுக்குமுகமாக அவரின் விருப்பத்திற்கிணங்க வட்டுக்கோட்டையிலே எல்லாவகையிலேயும் வளங்கொழிக்கும் தம்பதியர்களாக விளங்கிய பாலசிங்கம் நாகரத்தினம்மா தம்பதியர்களின் பாசத்துக்குரிய மகனான காணிப் பதிவகத்தில் கடமையாற்றும் திரு. பத்மராஜா அவர்களைத் திருமணம் செய்து வைத்து அவர்களுக்கு அவர்களின் இல்லறத்தால் கிடைத்த இனிய செல்வங்களான விதுஷன், கஜலக்ஷன், ஸைந்தவி ஆகியோரையும் பேரக்குழந்தைகளாகக் கண்டு அவர்களின் அரவணைப்போடு நீண்டதன் கடமைகளை நிரையாக ஆற்றி வந்தார்.

அமரர் குமாரசாமி அவர்கள் ஓய்வுபெற்றிருந்த காலத்திலே அவர் ஆற்றிய பணிகள் அளப்பெரியதாகும். தான் பிறந்த ஊரான சுழிபுரத்திலே புனிதப் பிரதேசமான திருவடிநிலைப் பிரதேசத்திலே தங்களுடைய முகாமைத்துவத்தின் கீழ் இருந்துவந்த சிவன் ஆலயத்திற்கு எந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் சென்று நித்திய பூசை செய்தும் கும்பாபிஷேகம் போன்றன செய்தும் புனருத்தாரண வேலைகள் செய்தும் பணியாற்றி வந்துள்ளார். அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான தேர்த்திருப்பணிச் சபையிலே பொறுப்பு வாய்ந்த பல பதவிகள் வகித்தும் அங்கத்தவராக இருந்துகொண்டும் அளப்பரிய சேவை செய்து வந்துள்ளார். மேலும் தொல்புரம், மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய நிதிச் சங்கத்திலேயும் பல பொறுப்பு வாய்ந்த பதவிகள் வகித்தும் அங்கத்தவராக இருந்தும் அர்ப்பணிப்போடு கூடிய சேவையாற்றி வந்தார். தன்னைக் காப்பாற்றி தன் பிள்ளைகளைக் காப்பாற்றி தன் மருமக்களைக் காப்பாற்றி தன் பேரப்பிள்ளை களைக் காப்பாற்றி காலம் முழுவதும் உழைத்து வந்த உத்தமரான அமரர் குமாரசாமி அவர்கள் இறுதிவரையிலே தான் அன்போடு நேசித்த மனைவியாரையும் காப்பாற்றி வந்தார்.

இப்படியாக காலம் முழுவதும் அர்ப்பணிப்போடு கூடிய பணியாற்றி வந்த அமரர் குமாரசாமி அவர்கள் வயதின் முதிர்ச்சியாலும் சில நோய்கள் ஆட்கொண்டமை காரணமாகவும் நோய்வாய்ப்பட்டுக் காணப்பட்டார். அமரர் அவர்களை நோயிலிருந்து மீட்டெடுப்பதற்காகவும் தான் நோய்வாய்ப்பட்டு விட்டேனே என்று கவலை கொள்ளாமல் இருப்பதற்காகவும் அமரர் குமாரசாமி அவர்களுடைய மகளான சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இசை ஆசிரியை திருமதி சிவாஜினி பத்மராஜா அவர்களும் மருமகனான காணிப் பதிவுக் காரியாலயத்தில் கடமையாற்றும் திரு.பா.பத்மராஜா அவர்களும் அயராது பாடுபட்டார்கள். வேண்டிய வேளை வேண்டிய இடத்திற்கெல்லாம் கூட்டிச்சென்று வந்தார்கள். பேரப்பிள்ளைகள் அடிக்கடி பேரனாரைச் சென்று பார்த்து வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார்கள். அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய மூத்த மகனான திரு.சிவசுப்பிரமணியம் கனடா நாட்டிலிருந்து அடிக்கடி நாட்டிற்கு வந்து தந்தையாரின் நலன்களைக் கவனித்தும் வேண்டிய உதவிகளைச் செய்தும் ஆறுதலளித்து வந்தார். ஆனாலும் அமரர் குமாரசாமி அவர்களுடைய உடல்நிலை மோசமாகிக் கொண்டே வந்தது. கடந்த சித்திரை மாத்திலிருந்து அமரர் குமாரசாமி அவர்கள் படுத்த படுக்கையானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11.09.1931ஆம் ஆண்டு சுழிபுரம் மேற்கிலே நல்லதோர் குடும்பத்திலே பாசமும் நேசமும் மிக்க தாய் தந்தையர்க்கு மகனாகப் பிறந்து நல்ல சகோதரர்களோடு வாழ்ந்து, அயராது உழைத்து குடும்பத்தைக் காத்து, அருமையும் பெருமையும் மிக்க இல்லாளை மணந்து, நன்மக்கட் பேறுபெற்று, இனி மருமக்களைக் கண்டு, பெருமை மிக்க பேரக்குழந்தைகளோடு உறவாடிப் பொதுப்பணிகள், திருப்பணிகள் என்பனவெல்லாம் ஆற்றி இழைத்துப் போன உடலோடு நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகவே இருந்த அமரர் குமாரசாமி அவர்கள் மருந்துகள் எதுவுமே பலனளிக்காது போகவே சிவசிந்தனையிலே மனதை ஒருநிலைப்படுத்தி ஒருவித தியானநிலையிலே புலன்கள் அனைத்தையும் அடக்கி அன்று ஆடிமாதம் 24ஆம் திகதி மக்களும் மருமக்களும், பேரக்குழந்தைகளும், சகோதரர்களும் தான் அன்போடு நேசித்த மனையாளும், உற்றார், உறவினர், ஊர்மக்களும் கதறியழ சுமார் எண்பத்தெட்டு ஆண்டுகளாக மற்றவர்களுக்காகவே இயங்கிக் கொண்டிருந்த தன் இதய ஒலியினை நிரந்தரமாகவே நிறுத்திக்கொண்டு சிவபதம் அடைந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**தேற்றம்**

**மந்தியென பூதமென**
**வால் சுருண்ட குக்கலென**
**மாய நிலை கொண்ட மதியே**
**வைரமணிப் பொன்னாகும்**
**வாசமனையாள் உருவும்**
**வந்த மறைநின்ற நிதியே**
**வெந்தளித்து நீறுபடும்**
**மேனியது சாகுமுன்னம்**
**வேண்டுவது நல்ல கதியே**
**மேலவரைச் சேருவதும்**
**நூலவனின் நட்புறவும்**
**விண்ணமரச் செய்யும் நிதியே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

அன்பையே அணியாய் ஆர்வமே தொனியாய்
அருந்தவ இல்லற பேறென வந்து
இன்பமே எம்மைச் சூழ்ந்திட வென்றே
ஏற்றமாய் என்னுள் நிறைந்த நாயகரே
இன்றெனை விட்டு விரைந்ததும் என்ன
இணையது பிரிந்து என்மனம் வாட
துன்பமார் சோகக் கடலினுள் மூழ்கி
துடிக்கிறேன் ஐயரின் மறைவு தாங்காமல்.....



## மகன் புலம்பல்

ஆசையுற மைந்தனெனை அன்போடு வளர்த்து
ஆளாக்கி வைத்த எங்கள் குலவிளக்கே
நேசமுடன் நாமுயர நித்தமுமே வழிசொல்லி
நீள் குரலில் சிவமொன்று அழைத்த ஐயாவே
பாசமுடை மொழி தன்னை பாரினிலே கேட்பதெப்போ
பக்கலிலே இல்லா பெருந்துயரம் வாட்டுதையா
ஓசையுறு உயர்வாழ்வு ஓய்ந்து போனதென்ன
ஒன்றும் உணராமல் நானிங்கே புலம்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் புலம்பல்

எப்பொழுதும் செல்வாவென்று அழைத்த உங்கள்
எழில்முகத்தை இனி நாங்கள் எங்கே காண்போம்?
தப்பாது உங்களடி தேடி வந்து
தயைகூற பணிசெய்யும் பேறு பெற்றேன்
எப்போதும் அருகிருந்த அம்மா நாங்கள்
எல்லோரும் செய்வதறியாது வாட
அப்பாவே அலறவிட்டு மறைந்த தென்ன
அழுகின்றோம் புலம்புகின்றோம் ஆற்றொணாமல்..

## மருமக்கள் புலம்பல்

பண்புநிறை பிள்ளைகளை பலமாய் தந்து
பண்பட்ட வாழ்வினுக்கு மூலம் ஆனீர்
எண்ணுகிற போதெல்லாம் இனிக்கும் அன்பாய்
எங்களையும் பிள்ளைகளாய் பேணி நின்றீர்
மண்ணுலகில் நாமெல்லாம் வாடி நிற்க
பேரரையும் கதறவிட்டு சென்றதென்ன
புண்பட்டு நொந்திங்கே புலம்புகின்றோம்
பூரணனே மாமாவுன் பிரிவு தன்னால்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Appappa....

Our earliest memory of Appappa is when he rode us in his bicycle to the cornerstone to buy us chocolates. We always loved spending time with you as kids not only because also for spoiling us with your affection.

You were always giving us words of encouragement and pushed us to study hard. I still remember when we went back to Sri Lanka in 2013. We talked about books and he always pushed us to read the Hindu times. Education was an important part of our childhood and he encouraged us to study hard.

It is these moments that make us wish we had more time together. We miss your contagious smile, spiritual wisdom, and infectious personality. You would never think twice to help the people around you and we hope to take that learning everywhere we go.

Thank you for being and raising a role model of a father, son, brother, and husband. We know where the sultan of our hearts gets his throne from. Rest in paradise Appappa, your legacy lives on.

*Love your*
*Grandchildren*
*Arathy, and Arany*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத் தாத்தா...

தாத்தா நீங்கள் எங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருடைய இதயத்திலும் ஒரு ஒளி தீபம், குடும்ப ஒற்றுமை, பெரியோரைக் கனம் பண்ணல் என்போடு பிறரிடம் பேசுவது எந்த சூழ்நிலையிலும் கடமை தவறாது உண்மைக்காக உழைப்பது. இவையெல்லாம் நீங்கள் எங்களை உட்கார வைத்துக் கற்றுத் தரவில்லை. உங்களைப் பார்த்து எப்படி வாழ வேண்டும் என்று கற்றுக்கொண்டோம்.

நீங்கள் உங்கள் மனைவி, தாய், தந்தை, சகோதரர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுன் எவ்வளவு கண்ணியமாக நடந்து கொண்டீர்களோ அதை எங்கள் குடும்பத்தில் எல்லோரும் பின்பற்றி வாழ ஒரு உதாரண புருஷராகத் திகழ்ந்தீரே. பாரதியார் கண்ணனை பல உறவுகளில் பார்த்தார். உங்களை நாம் தந்தையாகவும், ஆசானாகவும், அறிவுரை கூறும்போது நண்பனாகவும் பார்த்தோம்.

நான் சிறுபள்ளி படிக்கும்போது நீர் காலை எழுந்துவிட்டு முற்றத்தை கூட்டி நீராடி விட்டு முற்றத்தில் சுவரின் அருகில் கதிரையில் அமர்ந்து சிவபுராணம் வாசிப்பீர். அப்போது எல்லாம் உம் அருகில் கீழே அமர்ந்து இருப்பேன். பிள்ளையார் கோயில் தேர் திருவிழா சென்றால் அங்கு விளையாட்டு பொம்மை வாங்கித் தந்து எம் முகத்தில் சந்தோஷத்தைப் பார்த்தீரே தாத்தா....

உம்முடன் சிவன்கோயிலுக்கு மாட்டு வண்டியிலே நான் அண்ணாமார், பாட்டி எல்லோரும் பொங்கல் திருவிழாவிற்கு சென்றோமே.... அன்று கோயிலில் எல்லோரும் இடைவெளி இல்லாது வேலை செய்தோம். அதற்கு தலைமையே நீங்கள்தானே தாத்தா.... அன்று சிறிது நேரம் எமக்காய் ஒதுக்கி கோயில் வரலாறு பழக்கவழக்கம் எல்லாம் கூறினீரே. இன்றும் என் நினைவில் உள்ளது தாத்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் சாப்பாடு உண்ட பின் மிகுதியாக சொட்டுச் சோற்றுப் பருக்கையை அழகாக கோப்பையின் அருகில் வைத்து பின் பறவைகளுக்குக் கொடுப்பீரே தாத்தா... சுதந்திரமான பறவைபோல் இருந்த உங்களை சில மாதங்கள் முன் கதிரையில் முடங்கிக் கிடப்பதைப் பார்த்த எம் மனம் சுக்குநூறாகியது.

ஊர் மக்கள் எல்லோரும் உங்களை குமாரசுவாமி ஐயா என்றழைக்கும் போது எல்லாம் உங்களைச் சிவனாகப் பார்த்தேன். இன்று ஊர்மக்கள் முன் படுக்கையில் படுத்திருப்பதைப் பார்த்த எம் கண்ணில் இருந்து சொரிந்தன கண்ணீர்!!

உம் மரணத்தின் பின் வீட்டிற்கு வரும் போது எல்லாம் சிவன் இல்லாத கைலாய மலை போல் காட்சியளிக்கிறதே தாத்தா.... உங்கள் ஆன்மா அழியாது. எம் நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருப்பீர் எப்பொழுதும் தாத்தா.....

**அன்பார்ந்த பேரப்பிள்ளைகள்**
**ப.ஸைந்தவி, ப.கஜலக்ஷன், ப.விதுஷன்**

## அன்புடன் உங்களுக்கு

- **சாவில் பல ஒன்றாகும் - வாழ்வில் ஒன்று பலவாகும்.**
- **நல்ல ஒரு மனிதனிற்கு சாவு என்பதே கிடையாது.**
- **வெற்றி என்பது எட்டிவிடும் தூரத்தில் இல்லை,**
  **அதை நாம் அடைவதென்பது விட்டுவிடும் தூரத்தில் இல்லை.**
- **சுகத்தினை கண்டு மகிழாதீர்கள் அது துக்கத்தினுடைய ஒருவித அலங்காரம்.**
- **மனிதனின் முக்கிய தேவைகள் நம்பிக்கையும் பொறுமையும் ஆகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் புலம்பல்

ஒரு கொடியில் ஐவர்நாம் உதித்தோம் ஐயா

ஒருவரை இடைநடுவில் பிரிந்து நின்றோம்

பெருமையுடன் பெரியண்ணா என்று சொன்னால்

பிரியமுடன் பாசமழை பொழிந்தீர் ஐயா

அருமையுறு அண்ணாவே எம்மை விட்டு

அரனுலகம் விரைந்துதான் போன தென்ன

பெருக்குகின்ற துன்பத்தால் வாடி நாங்கள்

பிதற்றுகிறோம் அண்ணாவே உம்மை எண்ணி....

## மைத்துனன் புலம்பல்

தக்கபடி தங்கையரை துணையாய் தந்து

தகைமையுறு இல்லறத்திற் கனியாய் நின்றீர்

எக்கணமும் மறவாத அன்பு தன்னால்

எங்களது உள்ளத்தில் நிறைந்து வென்றீர்

அக்கறையாய் மச்சான் என்றே அழைத்து

ஆசையுற அணைக்கும் பிரியம் எங்கே

துக்கமுற நானிங்கே வாடுகின்றேன்

தூயவனே நின்பிரிவு உயிரைக் கொல்ல....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவர் உலகினில் நல்விருந்தாயினார்

**"வேழ முகத்து விநாயகனைத் தொழ**
**வாழ்வு மிகுந்து வரும்"**

தனக்கு மேலே ஒரு தலைவர் இல்லாத பெருமை வாய்ந்த விக்னேஸ்வரப் பெருமானை வழிபடுபவர்களது வாழ்வு செம்மையுறும். வள்ளி நாயகியார் மீது திருவருணோக்கஞ் செய்த முருகப்பெருமானை தமது எண்ணம் நிறைவு பெற ஆனை முகத்தண்ணலை வேண்டி நின்றார் என்கின்றது ஸ்காந்தம்

**"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்**
**ஞானகுரு வாணி பதம் நாடு"**

ஆனைமுகன் ஆறுமுகன் இருவரையும் ஒருசேர வழிபடுவதற்கு ஏதுவாக சகல செல்வங்களும் மலிந்த மூளாய்ப் பதியினில் எழுந்தருளி, அடியார்களின் துன்பங்களைப் போக்கி வரும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானையும் ஸ்ரீ முத்துக்குமார சுவாமியையும் ஒருசேர வழிபடும் பாக்கியம் பெற்றவர் அமரர் கந்தசாமி குமாரசாமி அவர்கள்.

மூளாய் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலய கந்தசஷ்டி விழா உபயகாரர் என்ற ரீதியில் 1997.04.22ஆம் திகதி மூளாய் ஸ்ரீ சித்தி விநாயகர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேர்த்திருப்பணிச் சபையின் நிர்வாக சபை ஏகமனதாக அடியேனின் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட பொழுது தனாதிகாரியாக அமரர் கந்தசாமி குமாரசாமி அவர்கள் தெரிவு செய்யப்பட்டு புதிய நேருக்கான இருப்பிடம் தேர் முட்டி என்பவற்றை கட்டி முடிக்க மெய் வருத்தம் பாராது பசி நோக்காது கண் துஞ்சாது குறித்த கட்டிட கருமங்களிலே கண்ணாயிருந்து கடமையாற்றியதுடன் புதிய தேருக்கான இருப்பிடம் தேர்முட்டி அமைப்பதில் பாரிய தடங்கல் ஏற்பட்ட போது தயங்காது மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நானாவிதம் 04/97 இலக்க வழக்கை 1997.06.14ஆம் திகதி தேர்த்திருப்பணிச் சபையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்பில் தாக்கல் செய்து மூளாய் ஸ்ரீ சித்திவிநாயகர் ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி தேர்த்திருப்பணிச்சபையினர் தேர் முட்டியையும் தேர் இருப்பிடத்தையும் கட்டுவதையும், பராமரிப்பதையும் எவரும் தடை செய்யக்கூடாது என மாண்புமிகு மாவட்ட நீதிபதி எ.என்.இராமச்சந்திரன் அவர்களால் 1997.06.14ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட கட்டளை இன்றும் வலுவிலுள்ளமை இரு ஆலயங்களின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களாற் பொறிக்கக்கூடிய சம்பவமாகும்.

தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் 1956ஆம் ஆண்டு தொடக்கம் மூளாய் கிராமத்தில் விடுதலை இயக்கத்தின் முன்னணித் தொண்டராக அரசியலில் தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுப்பதிலும் தன்மானத்தைக் காப்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அவருடைய ஆர்வம் அவர் குடும்பத்தினரிலும் விரவியது. அவருடைய செல்வக்குமரன் இயக்கத்தில் கொண்ட ஈடுபாடு காரணமாக காவல்துறையினால் கைது செய்யப்படும் நிலை பல முறை ஏற்பட்ட போதும் கலங்காது மனமகிழ்ச்சியோடு அனுப்பி வைத்த வீரத்தந்தையாக அமரர் குமாரசாமி விளங்கினார்.

சீரிய வாழ்க்கை வாழ்ந்து இறைவன் அடிசேர்ந்த அமரர் திரு.கந்தசாமி குமாரசாமி அவர்கள் வழியில் நேர்மை, இனத்துக்கும் மக்களுக்கும் சேவை, இறைபணி ஆகிய துறைகளில் எம்மை அர்ப்பணித்து உழைப்பதே அவர் வாழ்விலிருந்து நாம் கற்க வேண்டிய பாடமாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெறுவதாக

**"வேலுண்டு வினை இல்லை**
**மயில் உண்டு பயம் இல்லை"**

**2019.08.16**
**மூளாய் வீதி,**
**சுழிபுரம்.**

**இ.த.விக்னராசா**
**ஓய்வுநிலை மேல் நீதிமன்ற நீதிபதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# சிவபுராணம்

காப்பு

**திருச்சிற்றம்பலம்**

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவாசகமென்னுந்தேன்.

**திருச்சிற்றம்பலம்**

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க!
ஆகம்மாகி நின் றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகனநேகன் இறைவன் அடி வாழ்க!

வேகங் கெடுத் தாண்ட வேந்தன் அடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவர் உள் மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிர ங் குவிவா ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி!
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி!
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயாவென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங் கழிய நின்ற மறை யோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தான் னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார முதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாலிக்கும் ஆரியனே
நேய அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே அவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனே ஓ வென்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈகே என்தோழி பரிசேலோர் எம்பாவாய். 01

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும் போதெப்போ திப்போதா அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாகந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 02

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் தடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம்புன்மை தீர்த்தாட் கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகயாய் இன்னம் புலர்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 04

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவறியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 05

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவறியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குள் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குத் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்

உன்னற் கரியான் ஒருவன் இரஞ்சீரன்

சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்

தென்னாஎன் னாமுன்னத் தீசேர் மெழுகொப்பாய்

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்

சொன்னோங்கேள் வெவ்வேறாய்இன்னந்துயிலுதியோ

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடைத்தியால்

என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 07

கோழி சிலம்பச் சிலம்பங் குருகெங்கும்

ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்

கேழில் பரஞ்சோதி கேழில் பரங் கருணை

கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ

வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்

ஆழி யான் அன்புடமை ஆமாறும் இவ்வாறே

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை

ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 08

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே

பின்னைப் புதுமைக்கும் பேரத்துமப் பெற்றியனே

உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்

உன்னடியார்தாள் பணிவோம்ஆங்கவர்க்கே பாங்காவோம்

அன்னவரே எங்கண வராவார் அவருகந்து

சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்

இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்

என்ன குறையுமிலா மேலோர் எம்பாவாய். 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உயர்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவி துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைப்பூண் கனலாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையால் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தெம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இல்லாததோர் இன்பம்நம் பாலதாக
கொங்குண் கருங்குழலி நந்தெம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருறுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடிநலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாலப்போல
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகித்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லாதோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகனின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய். 20

முற்றிற்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

# திருப்பொற்சுண்ணம்

முத்து நல் தாமம் பூமாலை தூக்கி
முளைக் குடம் தூபம் நல் தீபம் வைம்மின்!
சத்தியும் சோமியும் பார் மகளும்
நா மகளோடு பல்லாண்(டு) இசைமின்!
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொயள்மின்!
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 1

பூ இயல் வார் சடை எம்பிராற்குப்
பொற் திருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடு வகிரன்ன கண்ணீர்!
வம்மின்கள்! வந்(து) உடன் பாடுமின்கள்!
கூவுமின்! தொண்டர் புறம் நிலாமே
குனிமின்! தொழுமின்! எம் கோன் எம் கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மை ஆளச்
செம் பொன் செய் சுண்ணம் இடித்து நாமே. 2

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூய பொன் சிந்தி நிதி நிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி எடுமின்!
அந்தரர் கோன் அயன் தன் பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை
எந்தரம் ஆள் உமையாள் கொழுநற்(கு)
ஏய்ந்த பொற் சுண்ணம் இடித்து நாமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா(சு) அணிமின்கள்! உலக்கை எல்லாம்
காம்பணிமின்கள்! கறை உரலை
நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக! என்று வாழ்த்தித்
தேசம் எல்லாம் புகழ்ந்தாடும் கச்சித்
திரு ஏகமபன் செம் பொன் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 4

அறு(கு எடுப்பார் அயனும் அரியும்
அன்றி மற்(று) இந்திரனோ(டு) அமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
நம்மில் பின்பல்ல(து) எடுக்க ஒட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திரு ஏகம்பன் செம் பொன் கோயில் பாடி
முறுவல் செவ் வாயினீர்! முக்கண் அப்பற்(கு)
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 5

உலக்கை பல ஒச்சுவார் பெரியர்
உலகம் எலாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாள் மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்து நாமே. 6

சூடகம் தோள் வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாம் எழுந்(து) ஆர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நம் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடக(ம்) மெல் அடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்(கு)
ஆடக மா மலை அன்ன கோவுக்(கு)
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 7

வாள் தடம் கண் மட மங்கை நல்லீர்
வரி வளை ஆர்ப்ப வண் கொங்கை பொங்கத்
தோள் திரு முண்டம் துதைந்(து) இலங்கச்
சோத்தெம்பிரான் என்று சொல்லிச் சொல்லி
நாள் கொண்ட நாள் மலர்ப் பாதம் காட்டி
நாயில் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆள் கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 8

வையகம் எல்லாம் உரல் அதாக
மா மேரு என்னும் உலக்கை நாட்டி
மெய் எனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திரு அடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணி தில்லை வாணனுக்கே
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய் குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தம் சிவனொடும் ஆட ஆடச்
செங் கயல் கண் பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ(டு) ஆடஆட
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகை வாள் நிலா எறிப்ப
வாய் திறந்(து) அம் பவளம் துடிப்பப்
பாடுமின்! நம் தம்மை ஆண்டவாறும்
பணி கொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின்! எம் பெருமானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின்! அம்பலத்(து) ஆடினானுக்(கு)
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 11

மை அமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத்தாட்கொண்(டு) அருமை காட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண் இணைப் பொன் தொடித்தோள்
பை அர(வு) அல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 12

மின் இடைச் செந் துவர் வாய்க் கரும் கண்
வெண் நகைப் பண் அமர் மென் மொழியீர்!
என்னுடை ஆர் அமு(து) எங்கள் அப்பன்
எம் பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்!
பொற் திருச்சுண்ணம் இடித்து நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ் குழல் சூழ்தரு மாலை ஆடச்
செங்கனி வாய் இதழும் துடிப்பச்
சேயிழையீர்! சிவலோகம் பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை இரைப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடை முடியான் கழற்கே
பொங்கிய காதலில் கொங்கை பொங்கப்
பொற் திருச்சுண்ணம் இடித்து நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச் சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத்(து) ஆண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும்பேற வாழ்த்திப்
பானல் தடம் கண் மடந்தை நல்லீர்!
பாடிப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 15

ஆவகை நாமும் வந்(து) அன்பர் தம்மோ(டு)
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம் மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம் பொன் செய் சுண்ணம் இடித்து நாமே. 16

தேன் அக மா மலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடை மேல்
வான் அக மா மதிப் பிள்ளை பாடி
மால் விடை பாடி வலக்கை ஏந்தும்
ஊன் அக மா மழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனகம் ஆக நஞ்சுண்டல் பாடிப்
பொற் திருச்சுண்ணம் இடித்து நாமே. 17




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன் தலை கொண்டு செண்டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயம் தனைக் கொன்(று) உரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயம் தனைப் பாடி நின்(று) ஆடி ஆடி
நாதற்குச் சுண்ணம் இடித்து நாமே. 18

வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழும் தென் தில்லை பாடிச்
சிற்றம்பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைப் பாடிக்
சங்கணம் பாடிக் கவித்த கைம் மேல்
இட்டு நின்றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்து நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்கு
பந்தமுமாய் வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினார்க்(கு)
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 20





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 | 24 |
| 09 | 07 |
| 1931 | 2019 |

எமது கல்லூரி ஆசிரியை திருமதி.ப.சிவாஜினி அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்

## கந்தசாமி குமாரசாமி

சிவபக்தனாய்...
ஆழ்கடல் அலை ஓசையில்...
திருவடிநிலை மண்ணில்..
சிவாலயம் அமைத்தவரே....
சிவத்துள் கலந்த சிந்தையாய்....
சிவரூபிகளாம் சிவசுப்பிரமணியம்
சிவாஜினி என்ற இரு குணக்குன்றுகளை
உலகிற்குத் தந்த உத்தமனரே...
எங்கே நீர் சென்று விட்டீர்....
அவனருளாலே அவன் தாழ் வணங்கி
அவன் பணிகென்றே அரிதாய் உழைத்திட்டீர்...
பார்வதி சிவனாய் பத்தினி தன்னொடு
ஆலய வீதியில் அழகாய் வலம் வந்தீர்
கோயிற் திருப்பணி, தேர்த் திருப்பணி என
நீர் செய்த பணிகள் எத்தனை.... எத்தனை...
காந்திய வழியில்... உம் இளமைத் தோற்றம்
கதர்க் காற்சட்டை, கதர் வேட்டி
கதர் மேற்சட்டை, கறுப்புத் தொப்பி
கையில் கரிய பை ஒன்றுடன்
மருந்து விற்பனையாளனாய்....
பேருந்தில் ஏறி இறங்கிய
காலங்கள் கண்முன்னே... தோன்றும்
கறுத்த உருவில்
கம்பீரமான தோற்றமாய்
சோழிய புரத்தின் தோன்றலாய்
மூளாயூரில் புகுந்த சொத்தாய்,
எங்கள் கல்லூரியின் பழைய மாணவனாய்
தங்கள் மைந்தனை தந்ததோடன்றி
இசைத்துறையின் இளவரசியாய்
சாதனை பலதை கல்லூரிக்குச் சேர்த்திடும்
ஆசிரியப் பெருந்தகை சிவாஜினியைத் தந்து
மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதை
மானிலம் புரிய வாழ்ந்து காட்டிய நீர்
சிவத்திலுள் கலந்து....
சிவனாகினீரோ.....

~ பிரிவைப்பகிரும் ~
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/ விக்ரோறியாக் கல்லூரி - சுழிபுரம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் விதைகள்

சுழிபுரத்தூர் உதித்தன்று மூளாயூர் வாழ்ந்துவந்த
பழியிறங்காப் பண்புடையார் பார்போற்றும் உத்தமனார்
அமரர்.உயர்திரு.கந்தசாமி குமாரசாமி அவர்கள்
காலத்தால் மறைந்து காவியமாகிவிட்டமையால்
துயருற்றிருக்கும் குடும்பத்தாரோடு நாமும்
துயர் பகிர்கின்றோம்!

மண்ணிற்கு மருந்தாக
11.09.1931

விண்ணிற்கு விருந்தாக
24.07.2019



நம்மூராம் மூளாயின் மூத்தமகன் நீரானீர்
செம்மையுறு சிவபெருமான் பக்தருமே நீரானீர்
இம்மையின்பம் முடிந்ததென்றோ குமாரசாமி ஐயாவே
அம்மையப்பர் அடிதேடி அவனிவிட்டே மறைந்திட்டீர்!

இல்லறத்தை வெற்றிகொண்டீர் இனியமக்கள் தனையீன்றீர்
நல்லறங்கள் பலவாற்றி நாள்தோறும் வாழ்ந்துவந்தீர்
சொல்லுதற்கு அரியவர்கள் குமாரசாமி ஐயாவே
வல்லவன்தாழ் வாழ்வதற்கோ வையகத்துள் மறைந்திட்டீர்!

வதிரன்புலோவானின் வாரிசென வாழ்ந்துவந்தீர்
முதிர்ஞானப் பக்தியுடன் முயன்றுபல பணிசெய்தீர்
விதியின்று முடிந்ததென்றோ குமாரசாமி ஐயாவே
அதிர்ந்து மனம் வெடித்திடநீர் அகிலத்துள் மறைந்திட்டீர்

மருந்தாளராகி இந்த மானிலத்தில் உதவிவந்தீர்
பெருகுந்திடுமோர் வெள்ளாடை உடுத்துயர்ந்த பணிசெய்தீர்
அருமருந்தாய் எமக்கிருந்த குமாரசாமி ஐயாவே
கருமேகம் தனில்கலந்தோ காரிருளுள் மறைந்திட்டீர்

சிவனவனின் பணியென்றால் ஊண்உறக்கம் தனைமறந்தீர்
அவன்பாதம் தொழுதலொன்றே அவனியதில் போதுமென்றீர்
தவவாழ்வு வாழ்ந்துயர்ந்த குமாரசாமி ஐயாவே
பவவினைகள் பாறிடவோ பாரைவிட்டே மறைந்திட்டீர்!

உத்தமியாள் தன்னோடும் மக்கள் மருமக்கள் பேரரென
சித்தம் கலங்கியுங்கள் பிரிவுக்காய்த் துடித்திடவே
புத்தகத்தே மூடிவிட்ட எங்கள் குமாரசாமி ஐயாவே
நித்தம்நாம் அவர்களோடு துயர்பகிர்ந்தோம் நீங்கள் சாந்தியுற!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சித்திவிநாயகர்
வர்த்தக நிலையமும்,
பிள்ளையார் கோவிலடி,
மூளாய்.
27.07.2019

இங்ஙனம்
தங்களின் பிரிவால் துயருறும்
க.பாலச்சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
11
★
09
★
1931



மறைவு
24
★
07
★
2019

டச்சு வீதி மூளாய்யை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்
## கந்தசாமி குமாரசாமி

உறங்காத உள்ளமொன்று உணர்வோடு போராடி
உறைவீடம் தேடியிங்கே உயிர்மடி சேர்ந்ததெங்கே?
அலையலையாய் காரணங்கள் ஆயிரமாய் குவிந்தாலும்
காலலாவன் கவர்ந்திட்ட உன் இன்னுயிரை மீட்டிடுமோ?
பற்றோடு பாசமதை நட்போடு பகிர்ந்தளித்து
மெய்யான அன்பதனை எல்லோருக்கும் இரங்கி நின்றாய்
பொய்யான வாழ்வென்று புறப்பட்டு போனதெங்கே?.
அடிமனம் உருகுதையா கண்ணில் நீர் பெருகுதையா
எண்ணம் தான் இறைஞ்சுதையா
உன் ஆத்மா சாந்தி திண்ணமையா.

***உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்.***
***ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!***

**27.07.2019**

**King Star Sports Club**
**Araly.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| இகமதில் | | பரமதில் |
|---|---|---|
| 1931 - 09 - 11 |  | 2019 - 07 - 24 |

## அமரர்

## கந்தசாமி குமாரசாமி

சிவ வழிபாட்டில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவரும், எமது பெரியதம்பிரான் கோவில் பரிபாலன சபையின் முன்னை நாள் உறுப்பினரும், திருவெம்பாவை உபயகாரருமாகிய அன்னாரின் பிரிவால் துயருறும் சுற்றத்தார்க்கு இரங்கலை தெரிவித்து, அன்னாரின் பக்தி மார்க்கத்தை நினைவு கூர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ கதிர் வேலாயுதப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிகின்றோம்.

பரிபாலன சபையினர்
ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்
சுழிபுரம்

27/07/2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு:
11 - 09 - 1931

இறப்பு:
24 - 07 - 2019

## அமரர் திரு
## கந்தசாமி குமாரசாமி

அவர்கள்

தொல்புரம் – மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்க முன்னாள் அங்கத்தவரும் முன்னாள் நிர்வாக சபை உறுப்பினருமாகிய அமரர் திரு கந்தசாமி குமாரசாமி அவர்கள் இடம்பெயர்ந்து சங்கம் மீண்டும் இயங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கியமையை இந்நேரம் நினைவு கூருகின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தியறிந்து ஆழ்ந்த கவலையும் வேதனையும் அடைகின்றோம். அவர் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல மூளாய் வதிரன்புலோ ஸ்ரீசித்திவிநாயகரையும் முருகப்பெருமானையும் வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

மூளாய்,
சுழிபுரம்.
25-07-2019

அன்னாரின் பிரிவால் துயருறும்
**நிர்வாக சபையினரும்,**
**ஊழியர்களும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## யாழ்மாவட்டத்திலுள்ள வைத்திய மற்றும் ஏனைய நிறுவனங்களின் தொலைபேசி இலக்கம்

| | | |
|---|---|---|
| 01. யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் | - | 021 222 2262 |
| 02. யாழ் போதனா வைத்தியசாலை | - | 021 222 2261 |
| 03. பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் | - | 021 222 2267 |
| 04. UNHCR | - | 021 222 2005 |
| 05. திருநெல்வேலி நேர்சிங்கோம் | - | 021 222 2263 |
| 06. கோலிகுறொஸ் | - | 021 222 2512 |
| 07. அப்பலோ வைத்தியசாலை | - | 021 222 3305 |
| 08. நடன முருகன் வைத்தியசாலை | - | 021 222 3635 |
| 09. கோண்டாவில் பஸ் டிப்போ | - | 021 222 2207 |
| 10. TRRO | - | 021 222 2416 |
| 11. ஹற்றன் நஷனல் வங்கி | - | 021 222 2787 |
| 12. இலங்கை வங்கி | - | 021 222 2760 |
| 13. வர்த்த வங்கி | - | 021 222 3148 |
| 14. தேசிய சேமிப்பு வங்கி | - | 021 222 2735 |
| 15. யாழ் ரெலிகொம் | - | 021 222 2211 |
| 16. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் | - | 021 222 2561 |
| 17. யாழ் வைத்தியசாலை | - | 021 222 3348 |
| 18. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை | - | 021 222 3742 |
| 19. யாழ் மாநகரசபை | - | 021 222 2275 |
| 20. யாழ் மின்சாரசபை | - | 021 222 2496 |
| 21. யாழ் செயலகம் | - | 021 222 2235 |
| 22. யாழ் பிரதேச செயலகம் | - | 021 222 2209 |
| 23. யாழ் பொலிஸ் நிலையம் | - | 021 222 2222 |
| 24. யாழ் நீதிமன்றம் | - | 021 222 2357 |
| 25. யாழ் தபாலகம் | - | 021 222 2250 |
| 26. யாழ் நூலகம் | - | 021 222 2019 |
| 27. யாழ் மத்திய பேரூந்து நிலையம் | - | 021 222 2281 |
| 28. சம்பந்தர் சிகிச்சை நிலையம் | - | 021 222 7259 |
| 29. போரூட் | - | 021 222 2177 |
| 30. உதயன் | - | 021 222 9944 |
| 31. வலம்புரி | - | 021 222 3387 |
| 32. தினக்குரல் | - | 021 222 2127 |
| 33. எக்ஸ்போ எயார் | - | 021 222 6297 |
| 34. லயன் எயார் | - | 021 222 2504 |
| 35. மனித உரிமை ஆணைக்குழு | - | 021 222 2021 |
| 36. மின்சாரசபை (சுன்னாகம்) | - | 021 222 0301 |
| 37. யாழ் அம்புலன்ஸ் | - | 021 222 9792 |
| | - | 021 222 2561 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




( ✯ இக் குறியீடு அமரர்களைக் குறிக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

பூமிதனில் மேன்மையுடன் நாம் வாழ
அரும்பணி பல செய்தே மறைந்திட்ட
அணைந்தும் அணையாத சோதியாய் எம் உள்ளத்தே
நிறைந்திருக்கும்
அமரர் கந்தசாமி குமாரசாமி அவர்கள்
இறைபதம் எய்திய செய்திகேட்டு ஓடோடி வந்துதவி
செய்தவர்கள், உணர்வோடு ஆறுதலை நவின்றவர்கள்,
அஞ்சலிகள் ஈந்திட்ட அன்பர்கள்,
தொலைத்தொடர்பு சாதனங்கள் ஊடாக
துயரதனை பகிர்ந்திட்ட உள்ளங்கள்
சுகவீனமுற்றவேளை அருகிலிருந்து கண்ணை இமை
காப்பது போல் பார்த்திட்ட உறவுகளுக்கும்
தேடி வந்து ஆறுதல் பல கூறியோர்க்கும், இறுதிக்
கிரியைகள் சடங்குகள் என இயன்றவரை
பலவழிகளிலும் உதவிய உற்றார், உறவினர்,
நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும்,
இம்மலரை நேர்த்தியாய் அச்சிட்ட
ஷாம்பவி அச்சகத்தினருக்கும்
இறுதிக் கிரியைகளில் தவறாமல் கலந்து கொண்டு
பிரார்த்தித்த அனைவருக்கும் நன்றிகள்.

**இங்ஙனம்**

மூளாய்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org